www.tamilarangam.net



# மல்லிகை டொமினிக் ஜீவா

# பாராட்டுவிழா

லண்டன் 20 – 01 – 2001

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


ஈழத்து இலக்கியத்தின் தனித்துவத்திற்கு
அத்திவாரமிட்ட
திரு டொமினிக் ஜீவா அவர்களுக்கு
எமது வாழ்த்துக்கள்!

# RAMA & COMPANY

***INDEPENDENT FINANCIAL ADVISERS***
***REGULATED BY THE PERSONAL INVESTMENT AUTHORITY***

**3 THE ORCHARD**
**WICKFORD**
**ESSEX**
**SS12 OHB**

**TEL : 01268 7666624  FAX : 01268 561805**
**MOBILE : 0956 369557**


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# டொமினிக் ஜீவா :
# பல நூறு விதை முகிழ்த்த பெருமரம்

வி.சிவலிங்கம்

இலக்கியம் என்பது மனித வாழ்க்கையின் பிரதி விம்பமாகவே அமைகிறது. மனித வாழ்வின் சுகங்கள், அவலங்கள் என்பவற்றை அதற்கே உரித்தான உணர்வுகளோடு எடுத்தியம்புகிறது. மனித இனத்தின் உணர்வுகளை, அதன் ஊடாட்டங்களை இலக்கிய கர்த்தாவினால்தான் அச்சொட்டாக உணர முடிகிறது. அதனால்தான் சமூக உறவாடல்களை தன் கதைகளில் பாத்திரங்களாக நடமாட விடுவதால் அவன் சிருஷ்டிகர்த்தா என அழைக்கப்படுகிறான். முதலாளித்துவ சமூக அமைப்பில் வாழ்ந்துவரும் நாம் பொருளாதார ரீதியாக நலிந்த வகுப்பினராக வாழ்ந்து வருகிறோம். சமூகத்தில் நிலம், மூலதனம், உற்பத்தி சாதனங்கள் என்பவற்றின் உடமையாளராக உள்ள வலிமை மிகுந்த வகுப்பினரின் ஒடுக்கு முறைக்கு அதிகளவில் முகம் கொடுக்கிறோம்.

இலங்கையில் உள்ள சமூக அமைப்பில் குறிப்பாக தமிழ் சமூக அமைப்பில் சாதி என்பதும் ஓர் ஒடுக்குமுறைச் சாதனமாக அமைந்துள்ளது. பொருளாதார ரீதியாக ஒடுக்கப்படும் மக்கள் அவ் ஒடுக்கு முறையிலிருந்து விடுவிக்கப்படாத வரை சமூக முன்னேற்றம் என்பது ஏற்படப்போவது இல்லை. பொருளாதார மாற்றமும், வர்க்கச் சார்பான ஆட்சிப் பொறி முறையும் மாற்றப்படாத பட்சத்தில் மனித சமத்துவம் ஏற்படப் போவதில்லை. சமூக ஒடுக்கு முறையும், ஏழை பணக்காரன் என்ற ஏற்றத் தாழ்வும் ஊழ்வினைப் பயன், அது எமது தலை எழுத்து, படைத்தவன் படி அளப்பான் என எண்ணி மனித ஆற்றலை மலினப்படுத்தி எவன் ஒருவன் சிந்திக்கிறானோ அவன் தன்னையே தான் நிராகரிக்கிறான். அவன் தன்னிலும் மற்றைய மனிதனிலும் நம்பிக்கையற்று வாழ்கிறான்.

இவ்வாறான தன்னம்பிக்கை அற்ற ஒரு மனிதனால் சமூகத்தில் வாழும் ஏனைய மனிதர்களின் ஆற்றலை அறிந்து கொள்ள முடியாது. சமூகத்தில் ஏற்பட்டு வரும் முரண்பாடுகளினூடாக அச் சமூகம் முன்னேறி வருவதை அவனால் அவதானிக்கவும் முடியாது. சமூகமானது முரண்பாடுகளை தொடர்ந்து உற்பத்தி செய்து வருகிறது. அம் முரண்பாடுகள் தீர்க்கப்பட்டு புதிய முரண்பாடுகள் தோற்றம் பெறுகின்றன. இருப்பினும் அவை முன்னையதை விட முன்னேற்றகரமானதாக அமைகின்றன.

ஓர் செடியின் விதையானது பொருத்தமான மண்ணைச் சேர்ந்து சரியான அளவில் வெப்பமும் நீரும் கிடைத்ததும் அது ஒரு செடியாகிறது. ஒன்றுக்கு ஒன்று முரண்பட்ட வெப்பத்தினையும், நீரையும் பெற்று செடியாக முளைப்பது அச் செடியின் (Negation) முரண்பாடாகும். அச் செடி தற்போது வளர்ந்து பூக்களையும், பின்னர் பல நூறு விதைகளையும் தருகிறது. ஒரு விதையின் செடியின் முரண்பாடுகளின் முரண்பாடுகளால; (Negation of Negation) பல வீரியமுள்ள புதிய விதைகள் மேலும் கிடைக்கின்றன. முதலாவது விதையினால் பெறப்பட்ட செடி திட்மிடப்பட்ட வகையில் வளர்க்கப்பட்டால் மாத்திரமே அதிலிருந்து வீரியமுள்ள விதைகளைப் பெற முடியும். முரண்பாடு என்பது ஒன்றை அழிப்பது அல்ல. முதலாவது முரண்பாட்டினை திட்டமிட்ட வகையில் ஒழுங்கு செய்தால் இரண்டாவது முரண்பாடு இயல்பானதாகவும், சிறந்த வெளிப்பாட்டையும் கொண்டு வரும்.

செடியின் விதையை மூலமாக வைத்து சமூக மாற்றத்திற்கான கருவை ஏங்கல்ஸ் என்ற சமூக விஞ்ஞானி இவ்வாறு தந்தார். ஓர் சமூக மாற்றத்திற்கும், முன்னேற்றத்திற்கும் முரண்பாடுகள் எவ்வாறு உறுதுணையாக உள்ளன என்பதை ஏங்கல்ஸ் குறிப்பிட்டவற்றையே டொமினிக் ஜீவா என்ற இலக்கிய கர்த்தாவின் வாழ்க்கையிலும் காண்கிறேன். ஒன்றுக்கொன்று முரண்பாடான தன்மையுள்ள வெப்பமும், நீரும் எவ்வாறு ஒரு விதையின் வளர்ச்சிக்கு அவசியமாக இருந்ததோ, அதே போன்றுதான் சாதிக் கொடுமைகள் புரையோடி, பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் தமிழ்ச் சமூகத்தின் ஒரு பகுதியினரை ஒடுக்கிக் கொண்டிருந்த போதுதான் அந்த ஜீவா என்ற விதை முளை விடுகிறது.

www.tamilarangam.net

விதை நன்கு முளை விடுவதற்கு பொருத்தமான நிலமும், நீரும், வெப்பமும் தேவை என ஏங்கல்ஸ் குறிப்பிட்டார். ஆம். ஜீவா என்ற விதை கம்யூனிஸ்ட் கட்சி என்ற பொருத்தமான நிலத்திலே விழுந்தது. ஏங்கல்ஸ் குறிப்பிட்டது போல ஜீவா என்ற விதையிலிருந்து முகிழ்ந்து வரும் செடி திட்டமிட்ட அடிப்படையில் முரண்பாடுகளுக்கூடாக வளர்க்கப்பட்டமையால்தான் அந்த ஒரு செடி பலநூறு சிறந்த விதைகளை நமக்கு அளித்திருக்கிறது.

ஜீவாவின் இலக்கியப் பயணம் 50 ஆண்டுகால வரலாற்றினைக் கொண்டது. கடந்த 50 ஆண்டுகளாக இத் துறையில் இவரால் எவ்வாறு நிலைக்க முடிகிறது?

தூரவாக இருந்து கிராமத்து வாழ்க்கையை சற்று மேலோட்டமாகப் பார்த்து, கிராமத்து மனிதர்கள் சிலருடன் பேசி, கிராமத்தையே முற்றாக அறிந்து கொண்டதாக எண்ணி எழுதும் வல்லுனன் போல கதை பண்ணும் இக் காலத்தில் பிறந்த மண்ணையும்,மக்களையும் தன் உயிர்போல நேசித்து அவர்களுடன் உண்டு, உறவாடி அவர்களின் இதயத்து எண்ணச் சுமைகளை உள்வாங்கி அதிலிருந்து உயிரோட்டமான பாத்திரங்களை உருவாக்கும் பிரமா இவர்.

சுதந்திரம், சமாதானம், சமத்துவம், மனித நேயம், விடுதலை என்பவற்றை தனது இலட்சியங்களாக ஏற்று தொழிலாள, விவசாய மக்களின் தலைமையில் உருவாகும் ஓர் உன்னத சமதர்ம சமுதாயத்தைக் காணவேண்டுமென எண்ணி தன்னை ஓர் சர்வதேச சமூகத்தில் இணைத்துக் கொண்டதால்தான் இம் மனிதனால் இன்று வரை இலக்கியப் பயணத்தைத் தொடர முடிகிறது

பத்திரிகையோ. சஞ்சிகையோ ஆரம்பிக்கும் ஒருவர் அது சந்தைப்படுத்த முடியுமா? தாக்குப் பிடிக்க முடியுமா? என்ற கேள்வியோடுதான் ஆரம்பிக்கிறார். யாழ்ப்பாணத்து மண்ணிலே தமிழ்த் துறையில் பண்டிதர்களின் ஆதிக்கம் நிறைந்திருந்த அந்த நாட்களில் சாதாரண சவரத் தொழிலாளியான. பண்டிதத் தமிழ் தெரியாத ஜீவாவினால் பத்திரிகை ஆரம்பிக்கலாம் என்ற துணிவு எங்கிருந்து பிறந்தது?

நிச்சயமாக இலட்சிய வேட்கையைத் தவிர வேறு எதுவும் இருக்க முடியாது. சமூகத்தில் நிலவிய முரண்பாடுகளின் கூர்மையே ஓர் இலட்சியவாதியை பெற்றெடுத்திருக்கிறது. கம்யூனிஸ்ட் கட்சியே தனது பாடசாலை என அடிக்கடி தெரிவித்து வரும் ஜீவா அதன் மூலம்தான் சமூகத்தில் புரையோடியுள்ள அழுக்குகளைத் தன்னால் காண முடிந்தது எனக் கூறுகிறார்.

சமூக மாற்றத்திற்கான தனது பணியாக பேனாவைத் தேர்ந்தெடுத்துள்ள ஜீவாவின் அரசியல் சகலரும் அறிந்ததே. தான் வாழும் சமூகத்தோடு இணைந்து அச் சமூகத்தின் மாற்றத்திற்கான தூண்டுகோலாக தன்னையும் இணைத்து, அதன் மூலம் அச் சமூகத்தைப் படித்து, தான் படித்தவற்றை தன் கதையின் பாத்திரங்களாக வடித்து, தூங்கிக் கிடக்கும் மனிதனின் ஆளுமையை அருட்டி விடும் ஆற்றல் அவர் பேனாவுக்கு உண்டு.

யாழ்ப்பாணத்து மண்ணிலே நன்கு வேருன்றி கிளை பரப்பி வாழும் யாழ். மக்கள் பேருழி காலம் வந்ததோ! என அங்கலாய்த்து அங்கொருவர், இங்கொருவராக திக்கெட்டும் சென்று பிறந்த மண்ணிலேயும் அகதிகளாக மாறிய வேளையில் தனது உடுத்த உடுப்புகளுடன் கொழும்பு வந்த போதும் மல்லிகையை மீளவும் கொண்டு வந்திருப்பது அவரது அபார துணிச்சலையும். மன வலிமையையும் காட்டுகிறது.

தான் பிறந்த மண்ணையும். மக்களையும் நேசித்து அந்த மக்களின் விடியலுக்காக, தன் உயிரிலும் மேலாக நேசிக்கும் தமிழ் மொழிக்காக நூற்றுக் கணக்கான எழுத்தாளர்களை உருவாக்கியிருக்கும் ஜீவாவின் மேல் இன்று கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருக்கும் தேசியவாதத்தை நேசிக்கும் சிலர் விசனம் கொள்வதையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

www.tamilarangam.net

சிங்கள பேரினவாதமும், பௌத்த மத மேலதிக்கமும் பாசிச தோற்றத்தினைப் பெற்று வரும் காரணத்தால் தமிழ் தேசிய வாதம் அதன் அதி தீவிரத் தன்மைக்கு தள்ளப்பட்டிருக்கிறது. இவ் இரண்டு போக்குகளும் மனித முன்னெற்தித்திற்கு மிகவும் ஆபத்தானவை. இந்த இரண்டு தன்மைகளுடனும் சமரம் செய்ய முடியாது. வர்க்க ஒற்றுமையை நேசிக்கும் சக்திகளின் கைகள் கட்டப்பட்டுள்ளன. எந்த வர்க்கத்தினால் சமூக மாற்றத்தினைக் கொண்டு வர முடியுமென அவர் எதிர் பார்த்தாரோ, அந்த வர்க்கம் பேரின வாதம், அதி தீவிர வாதம் என்ற விஷங்களை விழுங்கி உள்ளன.

இந்த ஆபத்தான போக்கினை எதிர்த்து நேச சக்திகளை ஒன்றிணைப்பது என்பது மிகவும் வில்லங்கமான அலுவலாக மாறியுள்ள இச் சூழ்நிலையில், தமது கருத்துகளைத் தாமே சுய தணிக்கை செய்ய வேண்டிய நிலமைக்கு இவர்கள் தள்ளப்பட்டுள்ளனர். தனது மனதில் உள்ள ஏக்கங்களை, உணர்வு அலைகளை தனது பேனா முனைக்குக் கொண்டு வர முடியாத சூழ்நிலையில் ஏதேதோ விதமாக எழுதி, ஏதேதோ விதமாகச் சொல்ல முயற்சிக்கின்றனர்.

சமூக மாற்றத்தை எனது வாழ்நாளில் கண்டுவிட வேண்டுமென்ற கற்பனை வாழ்வில் நான் என்றும் சஞ்சரிக்கவில்லை. அச் சமூக மாற்றத்தை ஆகர்சித்து நிற்கும் ஆயிரமாயிரம் எழுத்தாளர்கள் தோன்ற நானும் எனது பங்களிப்பைச் செய்கிறேன் என மிக அடக்கமாகத் தெரிவித்து வருகிறார். நாம் பிறந்த தேசத்தின் அவல நிலை குறித்த அவரது மன வேதனையை அவருடன் பேசும் ஒவ்வொரு வினாடியும் உணர்கிறேன்
.
மதம், மொழி, நிறம் என்பவற்றிற்கு அப்பால் நின்று மனிதனை நேசிக்கும் ஒவ்வொரு இலட்சியவாதியும் இப்படியான இக்கட்டடான நிலைக்குச் செல்வது ஓர் தவிர்க்க முடியாத நியதியாகி வருகிறது. இதனையிட்டு சிலர் விசனப்படுவதில் ஆச்சரியப்படுவதற்கு எதுவும் இல்லை. பொங்கல் செய்யும் போது, பொங்கல் பொங்கிவிட்டால் கொள்ளியை சற்று பின்னோக்கி இழுத்து விடுவது போல சற்ற அமைதியாக இருப்பது பொருத்தமாக இருக்கலாம். ஒடுக்கு முறை, சுரண்டல், என்பவற்றிற்கு எதிராக ஓர் இலட்சியப் பயணத்தை நடத்தி வரும் ஜீவாவின் நோக்கங்கள் சிங்கள பேரினவாத பௌத்த மத மேலாதிக்க சக்திகளின் நோக்கங்களுடன் சமரசம் செய்யப்பட முடியாதவை. அவரது கடந்த கால தனிப்பட்ட வாழ்க்கையும், இலட்சியமும், எழுத்துகளும் முரண்பாடுகளினூடாக வீரியத்துடன் எழுந்து வரும் புதிய சந்ததியை உருவாக்கும் சக்தி வாய்ந்தவை.

இவ்வாறான குணாதிசங்கள் கொண்ட மக்கள் போற்றும் எழுத்தாளனுடன் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்திருந்த காலங்கள் மறக்க முடியாதவை. மல்லிகை என்றால் ஜீவா, ஜீவா என்றால் மல்லிகை என பிரிக்க முடியாத வரலாறு ஆகிவிட்ட டொமினிக் ஜீவா அவர்களின் காலத்தில் நாம் வாழ்கிறோம் என்பதும், அவ் இனிய மனிதனுடன் இணைந்து செயற்பட்டோம் என்பதை எண்ணும் போதும் மிகவும் பெருமையாக உள்ளது.

தனது மரணத்தின் பின்னர் ஜீவாவின் உண்மைகள் பதியப்படும் என அடிக்கடி தெரிவித்து வரும் ஜீவா இன்று தாயகத்தில் இடம்பெற்று வரும் நிகழ்வுகள் குறித்து மனம் வருந்துவதை என்னால் உணர முடிகிறது.

மனித நேயத்தை தனது வாழ்வின் இலட்சியமாகக் கொண்டு மல்லிகை சஞ்சிகை மூலம் தமிழ் தொண்டு புரியும் அவரின் பணிகள் மேலும் தொடர வேண்டுமென வாழ்த்துகிறேன்.

www.tamilarangam.net


டொமினிக் ஜீவாவின் பணிகள் சிறக்க
வாழ்த்துகின்றோம்

# ALAGA & CO

**SOLICITORS**

**190 Tooting High Street**
**London SW17**
Tel: 020 – 8767 9892

www.tamilarangam.net

# இன்று நடக்கும் நிகழ்ச்சிகள்

ஈழத்தின் மூத்த எழுத்தாளர்
'மல்லிகை' டொமினிக் ஜீவாவின்
மிக நீண்ட தமிழ்ப் பணியையும்,
முப்பத்தாறு ஆண்டுகளாக தொடர்ந்து
மல்லிகையை வெளியிட்டு வருவதையும்
பாராட்டி பிரித்தானியா வாழ் தமிழ்ப்பேசும்
மக்களின் சார்பில் நடைபெறும்

# பாராட்டுவிழா

காலம்:

20–01–2001 சனிக்கிழமை இரவு 6.50 மணி

இடம்:

சிவன் நிலைய மண்டபம்
4A Clarendon Road
Lewisham, London SE13

நிகழ்ச்சித் தொகுப்பு: நாக சிறிகெங்காதரன்

வரவேற்புரை: பத்மநாப ஐயர்

வாழ்த்துரைகள்:

| | |
|---|---|
| எஸ் சிறீரங்கன் | சன்றைஸ்வானொலி |
| ஆனந்தராணி பாலேந்திரா | தமிழ் அவைக்காற்றுக் கழகம் |
| கே கிருஷ்ணராஜா | ஓவியர் |
| பாமா ராஜகோபால் | புதினம் ஆசிரியர் |
| என் கிருஷ்ணராஜா | தமிழ் வழக்கறிஞர்கள் சங்கம் |
| இளைய அப்துல்லா | தீபம் ரெலிவிசன் |
| எஸ் இராமராஜன் | ரிரிசி வானொலி |
| பெ இராஜநாயகம் | தமிழ் ரைம்ஸ் ஆசிரியர் |
| அங்கையற்கண்ணி செல்வராஜா | கவிஞர் |
| நற்குணதயாளன் | கலசம் ஆசிரியர் |
| மு நேமிநாதன் | வ்ழக்கறிஞர் |
| எஸ் ஜே யோசெப் | வழக்குரைஞர் |

சிறப்புரைகள்:

ஜீவாவின் இலக்கியம்
~ மு நித்தியானந்தன்

ஜீவாவின் அரசியல்
~ வி சிவலிங்கம்

மல்லிகையும் சிற்றிலக்கிய சஞ்சிகைகளும்
~மு புஷ்பராஜன்

ஏற்புரை: டொமினிக் ஜீவா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


தமிழுக்கு தொண்டு செய்வோன் சாவதில்லை

# SRI KANTH & CO

***SOLICITORS***

***ADMINISTRATORS OF OATHS***

**557 HIGH STREET**
**WEMBLEY**
**MIDDLESEX HA0 3DW**

**TEL : 020 8795 0648**
**FAX : 0208795 0649**

www.tamilarangam.net

# Ranjith & Co

## Solicitors

ஈழத்தமிழ் இலக்கியத்தை
தமிழர் வாழும் இட மெல்லாம் புகழ் புகழ் பெற வைத்த
ஜீவாவுக்கு
எங்கள் வாழ்த்துக்கள்

Ranjith & Co
1st Floor
176 Mitcham road
London SW17 9NJ

**Tel: 020-8767 9717** **Fax: 020-8767 9684**

---

**ஜேர்மனியில் நம்மவர் மனிதில் நிலைத்திருக்கும் மக்கள் ஸ்தாபனம்**

# Jaffna Stores

எந்த நாளும் மலிவு
எந்த நாளும் புதுப் பொலிவு
எந்த நாளும் நம்மவர் கூட்டம்

***நம்பிக்கை, நாணயம், தரம் அனைத்துக்கும்***

*Jaffna Stores*

**Jaffna Stores - Hamm**

**Jaffna Stores - Belafeld**

**Jaffna Stores -Breman**

**தொடர்புகளுக்கு:**
☎ 02381 12614

www.tamilarangam.net

# டொமினிக் ஜீவாவின் பணிகள் சிறக்க வாழ்த்துகின்றோம்

## Hotel Westeern (Pvt) Ltd

யாழ்ப்பாணம் செல்ல
இராணுவ அனுமதிப் பத்திரம்
ஒழுங்கு செய்யப்படும்

யாழ்ப்பாணம் செல்லும்
விமானச் சீட்டு
ஒழுங்கு செய்யப்படும்

*Located at 1/4 km from Colombo's*
*Best shopping complex*
***Majestic City Centre***

A/C Rooms, Telephonr, I.D.D, TV
Mini Bar, Restaurant, Bar
Room Service, Pool Tables
Airport Transfers, Rent-A-Car, Transports

**Food:**
Eastern. Western. Chinese. Indian & Sri Lankan Cuisine

E-mail: info@hotelwesteern.com
Web: www.hotelwesteern.com

Tel: +94 1 507161
+94 1 507162
+94 1 507163
+074 518 485
Fax: +074 518 481

35 Frankfurt Place
Bambalapitiya
Colombo 4
Sri Lanka

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# RAJA & CO

## Solicitors

**Raja Thavarajah LL.B**

பவளவிழாக் காணும்
'மல்லிகை' ஜீவாவை
செய்யும் பணிகள் தொடர
வாழ்த்துகிறோம்

**295 Balham High Road**
**London SW17 7B4**
**Tel: 020-8682 2585**
**FAX: 020-8682 2575**


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

RATNA & CO

**Solicitors**

* **Immigration/Home Office**
* **Refugee/Asylum**
* **Commercial Conveyancing**
* **Matrimonial**
* **House/Flat Purchase or Sale etc**

Mr & Mrs Ratnabalan
First Floor
168A High Street North
Eastham
London E6 1JB

**Tel: 020-8470 8818**

WE HAVE SPECIAL FARES TO

COLOMBO

AND MANY OTHER DESTINATIONS

WE CAN ARRANGE INSURANCE, CAR HIRE, HOTELS AND TRANSFERS

LinkAIR
Travels Limited

**361 LONDON ROAD, CROYDON, SURREY CR0 3PB**
**Tel: 020 8665 0206** **Fax: 020 8689 2576**
e-mail: sales@linkair.wslmail.co.uk
website: http://www.linkair.co.uk

www.tamilarangam.net


# Markandan & Co

## Solicitors

Empowered to Administer Oaths

* Immigration/Home Office
* Refugee/Asylum
* Commercial Conveyancing
* Matrimonial
* Reprsentation at Police Stations
* House/Flat Purchase or Sale etc

Thamil House
720 Romford road
Manor park
London E12 6BT

**Tel: 020-8514 8188** **Fax: 020-8514 8303**

மல்லிகையின் பணிகள் தொடர வாழ்த்துகின்றோம்

# OMEGA CAR HIRE

**43 STAMFORD HILL, LONDON N16 5SR**

**Tel: 020 8800 7212** **Fax: 020 8802 0212**

www.tamilarangam.net

**இன்றைய நிகழ்ச்சிகள் மகிழ்ச்சிகரமாகவும்**
**சிறப்புறவும் நடந்தேற உதவிய**

மண்டபத்தினைத் தந்துதவிய
லண்டன் சிவன் கோவில் நிர்வாகத்தினருக்கும்

ஜீவாவை தங்கள் 27 – வது இலக்கியச் சந்திப்பு
நிகழ்ச்சிக்குக் கூப்பிட்டதன் மூலம் லண்டன்
வருவதற்கு உதவிய
பாரிஸ் புலம் பெயர் இலக்கியக் குழுவினருக்கும்

பாராட்டுரைகள் வழங்க வந்துள்ள
பத்திரிகையாளர்கள்
இலக்கிய கர்த்தாக்கள்
பொது ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள்
இலக்கிய ஆர்வலர்களுக்கும்

இந்த மலருக்கு விளம்பரங்கள், ஆக்கங்கள்
தந்துதவிய ஆதரவாளர்களுக்கும்

மலரினை மிகக் குறுகிய காலத்தில்
அச்சிட்டு உதவிய
Set Line Data Printers
தொழிலாளர்களுக்கும்

நிகழ்ச்சிக்கு உணவு
தயாரித்து உதவிய நண்பர்களுக்கும்

'மல்லிகை நிதி' க்குப் பெரு விருப்புடன்
உதவிய அன்புள்ளங்கள் அனைவருக்கும்

இந்த மண்டபத்தில் அமர்ந்துள்ள
உங்கள் அனைவருக்கும்

*– பாராட்டு விழா அமைப்பாளர்கள்*

# என்றும் எங்கள் நன்றிகள்

www.tamilarangam.net


எத்தனை நகை மாளிகைகள் இனி ஆரம்பித்தாலும்

**லண்டனின் முதலாவது தமிழர் நகைமாளிகை**

*புத்தம் புதிய டிசைன்களில் 22 கரட் தங்க நகைகளுக்கு நம்பிக்கையான நிறுவனம்*

# வெஸ்டன் ஜீவல்லர்ஸ

# Western Jewellers

**230 UPPER TOOTING ROAD**
**TOOTING, LONDON SW17 7EW**
**Tel: 020-8767 3445  Fax: 020-8767 3753**

www.tamilarangam.net

ஆடுதல் பாடுதல் சித்திரம்
கவியாதினைய கலைகளில்
உள்ளம் ஈடுபட்டென்றும் நடப்பவர்
பிறர் ஈனநிலை கண்டு துள்ளுவர்

*வாழ்க பல்லாண்டு !*

***ரெங்கன் ந தேவராஜன்***